**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்.**

**முன்னிலை:- திரு.எஸ்.பிரபா சந்திரன், பி.எல்.,**

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்.**

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2057, விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 10 ம் தேதி)**

**அசல் வழக்கு எண்.241/2019**
**(CNR.No: TNNM01-002629-2019)**
**மற்றும்**
**அசல் வழக்கு எண்.181/2021**
**(நாமக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.186/2019)**
**(CNR.No:TNNM01-002388-2021)**

**அசல் வழக்கு எண்.241/2019**

1.இமயவர்மன் *
2. மைனர்.பரந்தாமன்
பை அடுத்த சிநேகிதர் தாய்வழி
தாத்தா சச்சிதானந்தம் .........வாதிகள்

**/எதிராக/**

1. ரமேஷ் (எ) ரமேஷ்காந்த்
2. செல்வராஜ்
3. கமலம் .........பிரதிவாதிகள்

* இ.ம.எண்.2/2023 மனுவில் 27.09.2023 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி 1ம் வாதி மேஜர் என விளம்புகை செய்யப்பட்டு, இ.ம.எண்.4/2023 மனுவில் 22.11.2023 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி தாவா திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
இ.ம.எண்.9/2025 மனுவில் 16.09.2025 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி தாவா வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**அசல் வழக்கு எண்.181/2021**

1. இமயவர்மன் *
2. மைனர்.பரந்தாமன்
பை அடுத்த சிநேகிதர் தாய்வழி
தாத்தா சச்சிதானந்தம்

.........வாதிகள்

**/எதிராக/**

1. ரமேஷ் (எ) ரமேஷ்காந்த்
2. செல்வராஜ்
3. கமலம்
4. தமிழ்நாடு மின்சார வாரியம்
பை அதன் சேர்மேன், சென்னை.
5. செயற்பொறியாளர், (இயக்கமும் பராமரிப்பும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாமக்கல்.
6. உதவி செயற்பொறியாளர்,(இயக்கமும், பராமரிப்பும்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், எருமப்பட்டி
7. உதவி செயற்பொறியாளர் (இயக்கமும், பராமரிப்பும்,
தமிழ்நாடு மின உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வரகூர்)

..........பிரதிவாதிகள்

* இ.ம.எண்.3/2023 மனுவில் 27.09.2023ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி 1ம் வாதி மேஜர் என விளம்புகை செய்யப்பட்டு, இ.ம.எண்.5/2023 மனுவில் 22.11.2023ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி தாவா திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
இ.ம.எண்.9/2025 மனுவில் 16.09.2025ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி தாவா வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இவ்விரு வழக்குகளும் கடந்த 10.03.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மேற்படி இரு வழக்குகளின் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குமரேசன் அவர்கள் ஆஜராகியும், இருவழக்குகளின் 2,3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பழனிசாமி அவர்கள் ஆஜராகியும், இருவழக்குகளிலும் 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு வழக்கு விசாரணையின் போது ஆஜராகாததால் 1ம் பிரதிவாதியைப் பொறுத்து தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், அ.வ.எண்.181/2021 வழக்கின் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.V.K. அறிவழகன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டும், இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்...

//பொதுவான தீர்ப்புரை//

**அசல் வழக்கு எண்.241/2019**

1) இத்தாவாவனது, பாகப்பிரிவினை பரிகாரத்திற்கும், தாவா செலவுத் தொகைக்கும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அசல் வழக்கு எண்.181/2021**

2) இத்தாவாவானது, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களுக்கும், தாவா செலவுத் தொகைக்கும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) அசல் வழக்கு எண்.241/2019 வழக்கில் இ.ம.எண்.9/2025ன் படி திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்–**

சேந்தமங்கலம் தாலுக்கா, பவித்திரம் கிராமத்தில் தாவா சொத்து அமைந்துள்ளது. தாவா சொத்தின் பழைய சர்வே எண்.93/2B, அதன் புதிய சர்வே எண்.93/2B2 மற்றும் பழைய சர்வே எண்.88/1 அதன் புதிய சர்வே எண்.88/1B1A ஆகும். வாதிகள் 1ம் பிரதிவாதியின் மக்கள். 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தினை கிரையம் பெற்ற நபர்கள் ஆவார்கள். சேந்தமங்கலம் தாலுக்கா, பவித்திரம் கிராமம், ச.எண்.72/6F, 72/10C, 73/3A, 73/3B, 72/6A, 72/6B, 72/7, 72/6D, 72/6E, 72/3Dல் 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதரர்கள் மேற்படியார்களின் தகப்பனார் ஆகியோர்களுக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்தன. மேற்படி சொத்துக்களில் கிடைத்த வருவாய் மற்றும் மேற்படி சொத்துக்களை 15.4.2005 தேதியில் விற்பனை செய்த வகையில் கிடைத்த தொகையில் 1ம் பிரதிவாதிக்குண்டான பங்கு தொகையினை கொண்டு 1ம் பிரதிவாதி லேவாதேவி தொழில் செய்து அதில் கிடைத்த வருவாயினை கொண்டு 13.5.2015 தேதியில் தாவா சொத்தினை கிரையம் பெற்றுள்ளார். தாவா சொத்து பூர்வீக சொத்தில் கிடைத்த வருவாயினை கொண்டும், 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்ட சொத்தாகும். அவ்வகையில் தாவா சொத்து வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட

சொத்துக்களாகும்.

தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருப்பினும் தாவா சொத்தினை வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் நாளதுவரை யாதொரு பாகப்பிரிவினையுமின்றி இந்து பிரிவினையற்ற பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து வந்துள்ளனர். அவ்வகையில் தாவா சொத்து உபயவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட இந்து பிரிவினையற்ற பொது குடும்ப சொத்துக்களாகும். 1ம் பிரதிவாதியும் அவருடைய மனைவியும் வாதிகளை அனாதரவு செய்து தான்தோன்றித்தனமாக மனம் போன போக்கில் வாழ்ந்து வருகிறார்கள். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக 1ம் வாதி, மைனர் 2ம் வாதியும் மேற்படியார்களின் தாய்வழி தாத்தாவான சச்சிதானந்தத்தின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் வாழ்ந்து வருகின்றனர். 1ம் வாதி, மைனர் 2ம் வாதியின் நலனிற்கும், அக்கறைக்கும் வாதிகளின் தாய் வழி தாத்தா தான் பாடுபட்டு வருகிறார். 1ம் வாதி, மைனர் 2ம் வாதியின் நலனிற்கும், அக்கறைக்கும் மேற்படியார்களின் தாய்வழி தாத்தாவின் செயல்பாட்டிற்கும் எவ்வித விரோதமும் இல்லை.

தாவா சொத்தில் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படி தலா 3ல் 1 பங்கு பாத்தியம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்து மேற்படியார்களுக்கு பாத்தியப்பட்டது என தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் கூறி வந்ததால் வாதிகளின் தாய்வழி தாத்தா பிரதிவாதிகளின் நடவடிக்கை மீது சந்தேகமடைந்து தாவா சொத்துக்களுக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 26.6.2019 தேதியில் வாய்மொழியாக வில்லங்கம் பார்த்துள்ளார். அப்போதுதான் 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை கடந்த 21.8.2013 தேதியில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, பவித்திரம் கிளையில் அடமானம் வைத்து தொகை ரூ.25,00,000/- அடமான கடன் பெற்றுக்கொண்டு மேற்படி தேதியிலேயே அடமான கடன்

ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரமும், பின்னிட்டு மேற்படி கடன் தொகையினை 1ம் பிரதிவாதி 4.5.2018 தேதியில் கட்டி தீர்த்து அன்றைய தினமே தாவா சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரமும் தெரிய வந்தது. மேற்படி கிரைய ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. மேற்படி கிரைய ஆவணத்தில் வாதிகள் தரப்பினர் அல்ல. மேற்படி கிரைய ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை கட்டுப்படுத்தாது. மேற்படி கிரைய ஆவணத்தை வாதிகள் இக்னோர் செய்கிறார்கள். அதனால் மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய வாதிகள் பரிகாரம் கோர வேண்டிய அவசியமில்லை.

தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்ததை அறிந்த வாதிகளின் தாய்வழி தாத்தா பிரதிவாதிகளை கடந்த 2.7.2019 தேதியில் நேரில் சந்தித்து தாவா சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதல்ல என எடுத்துகூறி தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை பாகப்பிரிவினை செய்து கொடுக்க கோரியதற்கு பிரதிவாதிகள் அதனை ஏற்க மறுத்துள்ளனர். இனியும் பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை பிரிவினை செய்து கொடுக்க முன்வருவார்கள் என்ற நம்பிக்கையில்லை. ஆதலால் தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து மூன்று சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை ஒதுக்கீடு செய்ய முதல்நிலை தீர்ப்பாணை பெறவும், அதனை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பெறவும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த பதில் உரையின் சுருக்கம்—</u>**

வாதிகளின் தாவா சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாக தள்ளுபடியாகத்தக்கது. தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று பிராதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. வாதியின் தாவா பிராதில் தாவா சொத்தினை இப்பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருப்பினும் தாவா சொத்தினை வாதிகள் மற்றும் இப்பிரதிவாதி ஆகியோர்கள் நாளதுவரை யாதொரு பாகப்பிரிவினையுமின்றி இந்து பிரிவினையற்ற பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து வந்தார்கள் என்றும், அவ்வகையில் தாவா சொத்து உபயவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட இந்து பிரிவினையற்ற பொது குடும்ப சொத்துக்கள் என்றும் இப்பிரதிவாதியும் அவருடைய மனைவியும் வாதிகளை அனாதரவு செய்து தான்தோன்றிதனமாக மனம் போன போக்கில் வாழ்ந்து வருவதாகவும், தாவா பிராதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மைனர் வாதிகள் மேற்படியார்களின் தாய்வழி தாத்தாவான சச்சிதானந்தத்தின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் வாழ்ந்து வருவது மட்டும் உண்மை. வாதியின் பிராதில் தாவா சொத்தில் வாதிகள் மற்றும் இப்பிரதிவாதிக்கும் இந்து வாரிசுரிமை சட்டப்படி தலா 3ல் 1 பங்கு பங்கு பாத்தியம் ஏற்பட்டுள்து என்றும், இந்நிலையில் 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்து மேற்படியார்களுக்கு பாத்தியப்பட்டது என தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் கூறி வந்ததாகவும் வாதிகளின் தாய்வழி தாத்தா பிரதிவாதிகளின் நடவடிக்கை மீது சந்தேகமடைந்து தாவா சொத்துக்களுக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 26.6.2019 தேதியில் வாய்மொழியாக வில்லங்கம் பார்த்தார் என்றும், அப்போது தான் இப்பிரதிவாதி தாவா சொத்தினை கடந்த 21.8.2013 தேதியில் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி,

பவித்திரம் கிளையில் அடமானம் வைத்து தொகை ரூ.25,00,000/- அடமான கடன் பெற்றுக்கொண்டு மேற்படி தேதியிலேயே அடமான கடன் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரமும், பின்னிட்டு மேற்படி கடன் தொகையினை 1ம் பிரதிவாதி 4.5.2018 தேதியில்கட்டி தீர்த்து அன்றைய தினமே தாவா சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரமும் தெரிய வந்தது என்று கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல.

வாதியின் தாவா பிராதில் பின்னிட்டு வாதிகளின் தாய்வழி தாத்தா 1.7.2019 தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாவா சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, பவித்திரம் புதூர் கிளையில் பெற்ற அடமான கடன் ஆவணத்திற்கு நகல் பெற்று பார்த்தார் என்றும், அப்போதுதான் 1ம் பிரதிவாதி தாவா சொத்து மேற்படியாருக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டதென குறிப்பிட்டு மேற்படி வங்கியில் தொகை ரூ.25,00,000/- அடமான கடன்பெற்றுக்கொண்டு அடமான கடன் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரம் தெரிய வந்தது என்றும், மேற்படி அடமான கடன் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும்,மேற்படி அடமான கடன் ஆவணத்தில் வாதிகள் தரப்பினர் அல்ல என்றும், மேற்படி அடமான கடன் ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை கட்டுப்படுத்தாது என்றும் மேற்படி அடமான கடன் ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு 4.5.2018ம் தேதியில் ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், மேற்படி கிரைய ஆவணத்தில் வாதிகள் தரப்பினர் அல்ல என்றும், மேற்படி கிரைய ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை கட்டுப்படுத்தாது

என்றும் மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய வாதிகள் பரிகாரம் கோர வேண்டிய அவசியமில்லை என்றும் கூறப்பட்டுள்ள சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும்.

உண்மையில் தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் 1ம் பிரதிவாதி கடந்த 1993ம் ஆண்டிலிருந்து 2013ம்ஆண்டு வரை ரமேஷ் சர்வீஸ் சென்டர் என்ற பெயரில் இருசக்கர வாகனத்தை பழுது பார்க்கும் தொழில் செய்து வந்தார். அதன் பின்னிட்டு மேற்படி கிராமத்திலேயே கடந்த 2013ம் ஆண்டிலிருந்து தற்போது வரை வர்மா ஆயில் ஸ்டோர் ரூ ஸ்பேர்ஸ் வைத்து தொழில் செய்து வருகிறார். மேற்படி தொழில் செய்து வந்த வருமானத்திலிருந்து தாவா சொத்துக்களை கடந்த 13.5.2013 தேதியில் 1ம் பிரதிவாதி அவருடைய பெயருக்கு கிரையம் பெற்றுள்ளார். அவ்வகையில் தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்திலிருந்து கிரையம் பெறப்பட்ட 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்தில் 1ம் பிரதிவாதியை தவிர வாதிகளுக்கோ மற்ற நபர்களுக்கோ எவ்வித உரிமையோ, பாத்தியமோ, அனுபவமோ இல்லை. அவ்வகையில் வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையோ, பங்கு பாத்தியமோ இல்லை.

வாதிகளின் தாவா பிராதில் தாவா சொத்துக்களை பூர்வீக சொத்துக்களின் வருமானத்திலிருந்து இப்பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெறப்பட்டதாக கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. இப்பிரதிவாதிக்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை. அதிலிருந்து வருமானமும் இல்லை. இப்பிரதிவாதிக்கு தனிப்பட பாத்தியப்பட்ட சொத்துக்களை அவருடைய சொந்த தேவைக்காக 2,3 பிரதிவாதிகளிடம் அடமான கடன் பெற்று அதற்கு ஆதரவாக 4.5.2018 தேதியில் அடமான கடன் ஏற்படுத்தியபோது 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியை ஏமாற்றி மோசடி செய்து அடமான கடன் ஆவணம் என திரித்து கூறி தாவா சொத்துக்களை பொருத்து கிரைய

ஆவணம் எழுதி பெற்றதை அறிந்த 1ம் பிரதிவாதி மேற்படி அடமான கடன் தொகையை 2,3 பிரதிவாதிகளிடம் இப்பிரதிவாதி திரும்ப செலுத்தி மேற்படி கிரைய பத்திரத்தை ரத்து செய்து கொடுக்கும்படி கோரியதற்கு 2,3 பிரதிவாதிகள் மேற்படி கிரையப்பத்திரத்தை ரத்து செய்துக்கொடுக்க முன்வராததால் இப்பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் மீது 4.5.2018 ம் தேதியில் 2,3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரைய ஆவணத்தை ரத்து செய்ய கோரியும், சுவாதீனம் வழங்க கோரியும் நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.112/2020 நெம்பரில் தாவா தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு எவ்வித பங்கு பாத்தியமும் இல்லை. பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையில்லை. அதனடிப்படையில் வாதிகளின் தாவா தள்ளுபடி ஆகத்தக்கது. தாவாவிற்காக கூறப்பட்டுள்ள வியாஜ்ஜியமூலம் உண்மையல்ல.

**<u>5) 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்–</u>**

வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி கூட்டு சேர்ந்து கொண்டு அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் சுயசம்பாத்திய சொத்தாகும். 2ம் பிரதிவாதியானவர் 1ம் பிரதிவாதியிடமிரந்து கிரையம் பெற்ற நல்லெண்ண கிரையதாரர் ஆவார். அசல் வழக்கானது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல.

சர்வே எண் 72/6F, 72/10C, 73/3A, 73/3B, 72/6A, 72/6B, 72/7, 72/6D, 72/6E மற்றும் 72/3D ஆகியவற்றின் கீழ் வரும் சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்களாக இருந்தபோதிலும், மேலும் அச்சொத்துக்களில் பாகப்பிரிவினை கோருவதற்கான நிவாரணம் இருந்தபோதிலும், வாதிகள், 1–

வது பிரதிவாதியின் சுயார்ஜிதச் சொத்தில் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். ஆகவே, வாதி தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. இவ்வழக்கானது வாதியின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு அல்லாமல், 1ம் பிரதிவாதியின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இளவர் ஒருவரின் சார்பாக வழக்குத் தொடர நீதிமன்றத்தின் அனுமதியை வாதி கோரவில்லை. வழக்கிற்கு வழக்கு மூலம் கிடையாது. தாவா சொத்தானது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பவித்திரம் கிளையில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய நிலையில், விற்பனை அறிவிப்பு வெளியிடப்பட்டு, விற்பனைத் தேதியாக 22.02.2018 நிர்ணயிக்கப்பட்டது. அந்த விற்பனை தேதிக்கு முன்னதாகவே, 1ம்பிரதிவாதி விற்பனைத் தொகையான ரூ.32,50,000–ஐ பெற்றுக்கொண்டு, அதன் பின்னர் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்குச் சாதகமாக விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றிக் கொடுத்துள்ளார்.

கடனுள்ள நிலையில் உள்ள ஒரு நபர், ஒரு சொத்தை நல்லெண்ணத்துடன் கூடிய ஒரு நேர்மையான வாங்குபவருக்கு (bonafide purchaser) தக்க பிரதிபலனைப் பெற்றுக்கொண்டு மாற்றிக் கொடுத்தால், அத்தகைய நேர்மையான வாங்குபவரின் உரிமைகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது என்பதே சட்டத்தின் நிலைபெற்ற கோட்பாடாகும்.

4/5/2018 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் வாசகங்களின்படி, வழக்குச் சொத்தில் ஏதேனும் வில்லங்கம் (encumbrance) இருப்பின், அதனை 1ம் பிரதிவாதி தனது எஞ்சிய சொத்தின் மீது ஒரு பற்றுரிமையை (charge) ஏற்படுத்துவதன் மூலம் சரிசெய்வார் என்று 1ம் பிரதிவாதி வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, 1ம் பிரதிவாதிக்கு எதிராகச் குறிப்பிட்ட செயல்நிறைவேற்றத்திற்கான (specific performance) வழக்கைத் தாக்கல்

செய்யும் உரிமையை பிரதிவாதிகள் தங்களுக்குரியதாகக் தக்கவைத்துள்ளனர். வழக்குரை பாரா 1 முதல் 11ல் கூறியுள்ள சங்கதிகள் தவறானவை, மறுக்கப்படுகின்றன. வாதிகளே மேற்படி சங்கதிகளை நிரூபிக்க வேண்டும். தாவா சொத்தானது பாகம் பிரிக்கப்படாத இந்து கூட்டுக்குடும்ப சொத்தின் ஒரு பகுதி என்பதை வாதிகள் நிரூபிக்கவேண்டும். இப்பிரதிவாதியானவர் தேவைப்படின் கூடுதல் எதிர்வழக்குரையினையும் தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக்கொள்கிறார். எனவே அசல் வழக்கை அதிகபடியான செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

6) **2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூடுதல் பதிலுரையின் சுருக்கம்–**

வாதிகளின் தாவா சுத்தப்பொய்யும், மோசடியுமானதாகும். பிரதிவாதிகளால் ஏற்கனவே அசல் தாவாவில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிலுரையை இந்த கூடுதல் பதிலுரையின் ஒரு பாகமாக வாசித்துக்கொள்ள வேண்டும். மேற்படி அசல் வழக்கில் ஏதோ இந்த வாதிகள் அவரது தாத்தா வீடான திருச்சியில் வசித்து வருவதாக கூறுவது சுத்தப்பொய். இன்றுவரை இந்த 1,2 வாதிகளும் அவரது தாயாரும் 1ம் பிரதிவாதி உடனே கூட்டாக வசித்து வந்த தற்பொழுது பொய்யான சங்கதிகள் அடிப்படையில் தாவாவை தாக்கல் செய்துள்ளனர். மேலும் இந்த 1,2 வாதிகளுக்கு இந்த 1ம் பிரதிவாதியே முன்னின்று அனைத்து சவரட்சனைகளையும் செய்து வருகிறார். மேலும் இந்த தாவா சொத்தானது வாதிகளுக்கு பூர்வீக சொத்துக்கள் என்பது சுத்தப்பொய். மேற்படி சங்கதியானது இவ்வழக்கிற்காக வாதிகளால் கற்பனையாக சித்திரிக்கப்பட்டுள்ளது. பிராதில் 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும்

தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வருவதாக கூறியிருப்பது சுத்தப்பொய். அப்படி உண்மையில் இருக்கும்பட்சத்தில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் இந்த வாதிகளை பராமரித்திருப்பார். மேற்படி தாவா சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டு பின்னிட்டு மேற்படி சொத்தை பொறுத்து 2,3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்தது உண்மை என்பதனால் பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாய்வழி தாத்தாவை வைத்து வழக்கை பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த 1ம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் இன்னும் சில உள்ளன. அவற்றினை இந்த தாவாவில் காட்டவில்லை. மேற்படி நிலையிலேயே மேற்படி தாவா partial partition என்ற தோஷத்தால் தள்ளுபடியாகத்தக்க ஒன்றாகும்.

உண்மையில் பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்து தாவா சொத்தை கிரையம் பெற்றிருந்தால் இந்த 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள மற்ற சொத்துக்களையும் சேர்த்து தாவாவில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரப்பட்டிருக்கும். இந்நிலையிலேயே மேற்படி தாவா சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடியாகத்தக்கதாகும். மேலும் இந்த பிரதிவாதிகளை நேரில் சந்தித்து வாதிகளுக்குண்டான 3/2 பாகத்தை பிரிவினை செய்து கொடுக்கும்படி பிராதில் கூறுவது சுத்தப்பொய். மேற்படி கார்டியனான சச்சிதானந்தத்தை இந்த 2,3 பிரதிவாதிகளுக்கு யாரென்றே தெரியாது. இந்நிலையில் பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த 2,3 பிரதிவாதிகள் சரியான பிரதிபிரயோஜனத்தின் அடிப்படையில் தான் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டதாகும். மேற்படி தாவா சொத்தை கிரையம் பெற்ற தேதியிலிருந்து இன்று வரை இந்த பிரதிவாதிகள் தங்கள் சுவாதினத்தில் வைத்து அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி வீதம் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததால் வருவாய்துறையால் இந்த 2,3 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா

வழங்கப்பட்டு இன்றுவரை மேற்படி தாவா சொத்திற்குண்டான வீட்டுவரி முதலானவையை இந்த 2,3 பிரதிவாதிகளே செலுத்தி அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி தாவா சொத்தில் இந்த 2,3 பிரதிவாதிகளை தவிர வேறு யாருக்கும் எவ்வித பாத்தியமும், உரிமையோ, அனுபவமோ கிடையாது. தாவா சொத்துக்களானது இந்த 2,3 பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டதாகும். மேலும் இந்த 1ம் பிரதிவாதியால் தாவா சொத்தை பொறுத்து பொய்யான சங்கதிகளை கூறி நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.112/2020 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில் பொய்யான சங்கதிகளை வறி இந்த 1ம் பிரதிவாதியின் தூண்டுதலால் அவரது மாமனாரான இந்த வழக்கின் கார்டியன் சச்சிதானந்தத்தை வைத்து வழக்கு பொய்யான சங்கதிகள் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கினை 2ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

<u>7) 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாவது கூடுதல் பதிலுரை சுருக்கம்–</u>

வாதிகளின் தாவா சுத்தப்பொய்யும், மோசடியுமானதாகும், சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி பிரதிவாதிகளால் ஏற்கனவே இந்த அசல் தாவாவில் பதிலுரை மற்றும் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிலுரைகளை இரண்டாவதாக தாக்கல் செய்யும் இந்த கூடுதல் பதிலுரையின் ஒரு பாகமாக சேர்த்து வாசித்து கொள்வது அவசியமாய் உள்ளது. இந்த வழக்கின் வாதிகளும் அவரது தாயாரும் இந்த 1ம் பிரதிவாதி உடனே கூட்டாக வசித்து வந்து தற்பொழுது பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாவாவினை

தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்தானது ஏதோ வாதிகளுக்கு பூர்வீக சொத்துக்கள் என பிராதில் கூறியுள்ளது சுத்தப்பொய். இந்த தாவா சொத்துக்களானது 1ம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். தாவா சொத்தை தவிர இந்த 1ம் பிரதிவாதி பெயரில் இன்னும் சில கிரைய ஆவணங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்படி கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா partital partition என்ற தோஷத்தால் தள்ளுபடியாகத்தக்க ஒன்றாகும். மேலும் இந்த வழக்கின் வாதிகள் பிராதில் கூறியுள்ளபோல் உண்மையில் தாவா சொத்து பூர்வீக சொத்து என கூறி வாதிகள் பாகப்பிரிவினை கோரியிருக்கும் நிலையில் இந்த 1ம் பிரதிவாதியின் தகப்பனாரும் வாதிகளின் பாட்டனாருமான சுப்பையா பெயரில் உள்ள சொத்துக்களையும் சேர்த்து பாகப்பிரிவினை கோரியிருப்பார். மேற்படி சொத்துக்களை இந்த தாவாவில் சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி தாவா partial partition என்ற தோஷத்தால் தள்ளுபடியாகத்தக்க ஒன்றாகும்.

தாவா சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு சுயராஜ்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி தாவா சொத்தினை இந்த பிரதிவாதிகள் சரியான பிரதிபிரயோஜனத்தின் அடிப்படையில் கிரையம் பெற்று இன்றுவரை தாவா சொத்தினை அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி தாவா சொத்தில் கிரையம் பெற்ற பின்னிட்டு மேற்படி தாவா சொத்திற்குண்டான வருவாய்துறை ஆவணங்கள் மற்றும் மின் இணைப்புகளை இந்த பிரதிவாதி அவர்களது பெயருக்கு மாற்றி மேற்படி தாவா சொத்தில் உள்ள வீட்டிற்குண்டான வீட்டு வரி மற்றும் மின் கட்டணம் முதலியவைகளை இந்த பிரதிவாதிகள் அவர்களுடைய பெயரில் செலுத்தி அனுபவம் செய்து வருகின்றனர். மேலும் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி நாமக்கல் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் இந்த பிரதிவாதிகள் பெயரில் இந்த தாவா சொத்தை

பொருத்து ஏற்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என கூறி அ.வ.எண்.112/2020 என்ற எண்ணில் தாவா தாக்கல் செய்திருந்தார். மேற்படி தாவாவானது இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இந்நிலையில் தாவா சொத்தை இப்பிரதிவாதிகள் எவ்வித இடைஞ்சலும் இன்றி அனுபவம் செய்து வருகின்றனர். இந்நிலையில் பொய்யான சங்கதிகள் கூறி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தாவா சொத்தில் உள்ள குடிநீர் இணைப்புக்குண்டான குடிநீர் கட்டணம் முதலியவற்றை இந்த பிரதிவாதிகளே செலுத்தி வருகின்றனர். இந்த வாதிகள் இன்றுவரை 1ம் பிரதிவாதியுடனே வசித்துக்கொண்டு தற்பொழுது பொய்யான சங்கதிகளை கூறி தாவாவினை தாக்கல் செய்துள்ளனர். எனவே வாதிகளின் தாவாவை 2ம்பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

**8) அ.வ.எண்.241/2019 வழக்கில் 23.10.2019ம் தேதியில் வனையப்பட்ட எழுவினாக்கள்–**

1) Whether the plaintiffs are entitled to get preliminary decree of 2/3 share over the suit schedule properties by metes and bounds as prayed for in the plaint or not?

2) To what other relief?

**9) 6/2/2023 தேதியில் வனையப்பட்ட கூடுதல் எழுவினாக்கள்–**

1) பூர்வீக சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு முதல் பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருந்தாலும், தாவா சொத்து பூர்வீக பொது குடும்ப சொத்து என வாதிகள் கூறியிருப்பது சரியா?

2) தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்து என முதல் பிரதிவாதி கூறியிருப்பது சரியா?

3) தாவா சொத்தில் 1, 2 வாதிகள் மற்றும் முதல் பிரதிவாதிக்கு தலா 1/3 பங்குள்ளதென வாதிகள் கூறியிருப்பது சரியா?

**10) அசல் வழக்கு எண்.181/2021 வழக்கில் இ.ம.எண்.9/2025 ன்படி திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்–**

சேந்தமங்கலம் தாலுக்கா, பவித்திரம் கிராமத்தில் தாவா சொத்து அமைந்துள்ளது. தாவா சொத்தின் பழைய சர்வே எண்.93/2B அதன் புதிய சர்வே எண்.93/2B2 மற்றும் பழைய சர்வே எண்.88/1. அதன் புதிய சர்வே எண்.88/1B1A ஆகும். வாதிகள் 1ம் பிரதிவாதியின் மக்கள். 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தினை கிரையம் பெற்ற நபர்கள் ஆவார்கள். சேந்தமங்கலம் தாலுக்கா, பவித்திரம் கிராமம், ச.எண்.72/6F. 72/10C, 73/3A, 73/3B, 72/6A, 72/6B, 72/7, 72/6D, 726E, 72/3D ல் 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதரர்கள் மேற்படியார்களின் தகப்பனார் ஆகியோர்களுக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்தன. மேற்படி சொத்துக்களில் கிடைத்த வருவாய் மற்றும் மேற்படி சொத்துக்களை 15.4.2005 தேதியில் விற்பனை செய்த வகையில் கிடைத்த தொகையில் 1ம் பிரதிவாதிக்குண்டான பங்கு தொகையினை கொண்டு 1ம் பிரதிவாதி லேவாதேவி தொழில் செய்து அதில் கிடைத்த வருவாயினை கொண்டு 13.5.2015 தேதியில் தாவா சொத்தினை கிரையம் பெற்றுள்ளார். தாவா சொத்து பூர்வீக சொத்தில் கிடைத்த வருவாயினை கொண்டும், 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்ட சொத்தாகும். அவ்வகையில் தாவா சொத்து வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும்.

தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருப்பினும் தாவா சொத்தினை வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் நாளதுவரை யாதொரு பாகப்பிரிவினையுமின்றி இந்து

பிரிவினையற்ற பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து வந்துள்ளனர். அவ்வகையில் தாவா சொத்து உபயவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட இந்து பிரிவினையற்ற பொது குடும்ப சொத்துக்களாகும். 1ம் பிரதிவாதியும் அவருடைய மனைவியும் வாதிகளை அனாதரவு செய்து தான்தோன்றித்தனமாக மனம் போன போக்கில் வாழ்ந்து வருகிறார்கள். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக 1ம் வாதி, மைனர் 2ம் வாதி மேற்படியார்களின் தாய்வழி தாத்தாவான சச்சிதானந்தத்தின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் வாழ்ந்து வருகின்றனர். 1ம் வாதி, மைனர் 2ம் வாதியின் நலனிற்கும், அக்கறைக்கும் வாதிகளின் தாய் வழி தாத்தா தான் பாடுபட்டு வருகிறார். 1ம் வாதி, மைனர் 2ம் வாதியின் நலனிற்கும், அக்கறைக்கும் மேற்படியார்களின் தாய்வழி தாத்தாவின் செயல்பாட்டிற்கும் எவ்வித விரோதமும் இல்லை.

தாவா சொத்தில் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படி தலா 3ல் 1 பங்கு பங்கு பாத்தியம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்து மேற்படியார்களுக்கு பாத்தியப்பட்டது என தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் கூறி வந்ததால் வாதிகளின் தாய்வழி தாத்தா பிரதிவாதிகளின் நடவடிக்கை மீது சந்தேகமடைந்து தாவா சொத்துக்களுக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 26.6.2019 தேதியில் வாய்மொழியாக வில்லங்கம் பார்த்துள்ளார். அப்போதுதான் 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை கடந்த 21.8.2013 தேதியில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பவித்திரம் கிளையில் அடமானம் வைத்து தொகை ரூ.25,00,000/- அடமான கடன் பெற்றுக்கொண்டு மேற்படி தேதியிலேயே அடமான கடன் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரமும், பின்னிட்டு மேற்படி கடன் தொகையினை 1ம் பிரதிவாதி 4.5.2018 தேதியில் கட்டி தீர்த்து அன்றையதினமே தாவா சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரமும்

தெரிய வந்தது.

பின்னிட்டு வாதிகளின் தாய்வழி தாத்தா 1.7.2019 தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பவித்திரம் புதூர் கிளையில் பெற்ற அடமான கடன் ஆவணத்திற்கு நகல் பெற்று பார்த்துள்ளார். அப்போது தான் 1 ம் பிரதிவாதி தாவா சொத்து மேற்படியாருக்கு சுயார்ஜதமாய் பாத்தியப்பட்டதென குறிப்பிட்டு மேற்படி வங்கியில் தொகை ரூ.25,00,000/– அடமான கடன் பெற்றுக்கொண்டு அடமான கடன் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்த விபரம் தெரிய வந்தது. மேற்படி அடமான கடன் ஆவணத்தில் வாதிகள் தரப்பினர் அல்ல. மேற்படி அடமான கடன் ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை கட்டுப்படுத்தாது. மேற்படி அடமான கடன் ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3 ல் 2 பங்கினை பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதல்ல.

அதேபோல் வாதிகளின் தாய்வழி தாத்தா 1.7.2019 தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1ம்பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு 4.5.2018 தேதியில் ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணத்திற்கு நகல் பெற்று பார்த்துள்ளார். அப்போதுதான் 1ம் பிரதிவாதி தாவா சொத்து மேற்படியாருக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டதென குறிப்பிட்டு 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்த விபரம் தெரிய வந்தது. மேற்படி கிரைய ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. மேற்படி கிரைய ஆவணத்தில் வாதிகள் தரப்பினர் அல்ல. மேற்படி கிரைய ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை கட்டுப்படுத்தாது. மேற்படி கிரைய ஆவணத்தை வாதிகள் இக்னோர் செய்கிறார்கள். அதனால் மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய வாதிகள் பரிகாரம் கோரவேண்டிய அவசியம் இல்லை.

தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்ததை அறிந்த வாதிகளின் தாய்வழி தாத்தா பிரதிவாதிகளை கடந்த 2.7.2019 தேதியில் நேரில் சந்தித்து தாவா சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதல்ல என எடுத்துகூறி தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை பாகப்பிரிவினை செய்து கொடுக்க கோரியதற்கு பிரதிவாதிகள் அதனை ஏற்க மறுத்துள்ளனர். இனியும் பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை பிரிவினை செய்து கொடுக்க முன்வருவார்கள் என்ற நம்பிக்கையில்லை. ஆதலால் தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து மூன்று சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை ஒதுக்கீடு செய்ய முதல்நிலை தீர்ப்பாணை பெறவும், அதனை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பெறவும் அ.வ.எண்.241/2019 நெம்பரில் தாவா தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. அதனை அறிந்து கொண்ட 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் துணையுடன் தாவா சொத்தில் உள்ள வரகூர் மின் பகிர்மான மின் இணைப்பு எண்கள் 206–005–1532 (Tarrif V), 206–005–1533 (Tarrif V) 206–005–1652 (Tarrif IV), 206–005–1504(Tarrif VI) உடைய மின் இணைப்புகளை பெயர் மாற்றம் செய்ய 4 முதல் 7 பிரதிவாதிகளிடம் மனு கொடுத்துள்ளதாக கூறிக்கொண்டு தாவா சொத்தில் உள்ள மேற்படி மின் இணைப்புகளை 5 முதல் 8 பிரதிவாதிகளின் கடந்த 5.7.2019 தேதியில் பார்வையிட்டுள்ளனர்.

தாவா சொத்து மற்றும் அதிலுள்ள மின் இணைப்பில் வாதிகளுக்கு பொதுவில் 3ல் 2 பங்கு உள்ள நிலையில் மேற்படி மின் இணைப்புகளை 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கோருவது சரியல்ல. அதனால் வாதிகள் 2 முதல் 7 பிரதிவாதிகளை கடந்த 9.7.2019 தேதியில்

நேரில் சந்தித்து தாவா சொத்து மற்றும் அதிலுள்ள வரசூர் மின் பகிர்மான மின் இணைப்பு எண்கள் 206−005−1532 (Tarrif V), 206−005−1533 (Tarrif V) 206−005−1652 (Tarrif IV), 206−005−1504(Tarrif VI) உடைய மின் இணைப்புகளை நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றம் அ.வ.எண்.241/2019 தாவாவில் இறுதி பாகப்பிரிவினை ஏற்படும் வரை 2,3 பிரதிவாதிகள் பெயரில் பெயர் மாற்றம் செய்ய வேண்டாம் என ஆட்சேபனை தெரிவித்ததற்கு மேற்படியார்கள் அதனை ஏற்க மறுத்துள்ளனர். அதுமட்டுமின்றி 2,3 பிரதிவாதிகள் 4 முதல் 7 பிரதிவாதிகளிடம் மனு கொடுத்து தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புகளை துண்டிக்க போவதாக பௌரசம் கூறி வருகிறார்கள். இனியும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புகளை நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றம் அ.வ.எண்.241/2019 தாவாவில் இறுதி பாகப்பிரிவினை ஏற்படும் வரை 2,3 பிரதிவாதிகள் பெயரில் மாற்றம் செய்யாமல் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை.

எனவே தாவா சொத்துக்களை பொருத்து நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றம் அ.வ.எண்.241/2019 தாவாவில் இறுதி பாகப்பிரிவினை ஏற்படும் வரை தாவா சொத்தில் உள்ள வரகூர் மின் பகிர்மான மின் இணைப்பு எண்கள் 206−005−1532 (Tarrif V), 206−005−1533 (Tarrif V) 206−005−1652 (Tarrif IV), 206−005−1504(Tarrif VI) உடையமின் இணைப்புகளை 4 முதல் 7 பிரதிவாதிகள் 2,3 பிரதிவாதிகள் பெயரில் பெயர் மாற்றம் செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை டிக்ரி பிறப்பித்தும், தாவா சொத்துக்களை பொறுத்து நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றம் அ.வ.எண்.241/2019 தாவாவில் இறுதி பாகப்பிரிவினை ஏற்படும் வரை தாவா சொத்தில் உள்ள வரகூர் மின் பகிர்மான மின் இணைப்பு எண். 206−005−1532 (Tarrif V), 206−005−1533 (Tarrif V) 206−005−1652 (Tarrif IV), 206−005−1504(Tarrif VI) மின் இணைப்புகளை 2 முதல் 7 பிரதிவாதிகள் துண்டிக்காமல் இருக்கவும்

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும், தாவா செலவுத் தொகைக்கும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11) **<u>1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையின் சுருக்கம்–</u>**

வாதிகளின் தாவா சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாக தள்ளுபடியாகத்தக்கது. தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று பிராதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. வாதியின் தாவா பிராதில் தாவா சொத்தினை இப்பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருப்பினும் தாவா சொத்தினை வாதிகள் மற்றும் இப்பிரதிவாதி ஆகியோர்கள் நாளதுவரை யாதொரு பாகப்பிரிவினையுமின்றி இந்து பிரிவினையற்ற பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து வந்தார்கள் என்றும், அவ்வகையில் தாவா சொத்து உபயவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட இந்து பிரிவினையற்ற பொது குடும்ப சொத்துக்கள் என்றும் இப்பிரதிவாதியும் அவருடைய மனைவியும் வாதிகளை அனாதரவு செய்து தான்தோன்றிதனமாக மனம் போன போக்கில் வாழ்ந்து வருவதாகவும், தாவா பிராதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மைனர் வாதிகள் மேற்படியார்களின் தாய்வழி தாத்தாவான சச்சிதானந்தத்தின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் வாழ்ந்து வருவது மட்டும் உண்மை. வாதியின் பிராதில் தாவா சொத்தில் வாதிகள் மற்றும் இப்பிரதிவாதிக்கும் இந்து வாரிசுரிமை சட்டப்படி தலா 3ல் 1 பங்கு பங்கு பாத்தியம் ஏற்பட்டுள்து என்றும், இந்நிலையில் 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்து மேற்படியார்களுக்கு பாத்தியப்பட்டது என தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் கூறி வந்ததாகவும் வாதிகளின் தாய்வழி தாத்தா பிரதிவாதிகளின் நடவடிக்கை மீது சந்தேகமடைந்து தாவா சொத்துக்களுக்கு

சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 26.6.2019 தேதியில் வாய்மொழியாக வில்லங்கம் பார்த்தார் என்றும், அப்போது தான் இப்பிரதிவாதி தாவா சொத்தினை கடந்த 21.8.2013 தேதியில் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, பவித்திரம் கிளையில் அடமானம் வைத்து தொகை ரூ.25,00,000/- அடமான கடன் பெற்றுக்கொண்டு மேற்படி தேதியிலேயே அடமான கடன் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரமும், பின்னிட்டு மேற்படி கடன் தொகையினை 1ம் பிரதிவாதி 4.5.2018 தேதியில் கட்டி தீர்த்து அன்றைய தினமே தாவா சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரமும் தெரிய வந்தது என்று கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல.

வாதியின் தாவா பிராதில் பின்னிட்டு வாதிகளின் தாய்வழி தாத்தா 1.7.2019 தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாவா சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, பவித்திரம் புதூர் கிளையில் பெற்ற அடமான கடன் ஆவணத்திற்கு நகல் பெற்று பார்த்தார் என்றும், அப்போதுதான் 1ம் பிரதிவாதி தாவா சொத்து மேற்படியாருக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டதென குறிப்பிட்டு மேற்படி வங்கியில் தொகை ரூ.25,00,000/- அடமான கடன்பெற்றுக்கொண்டு அடமான கடன் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த விபரம் தெரிய வந்தது என்றும், மேற்படி அடமான கடன் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், மேற்படி அடமான கடன் ஆவணத்தில் வாதிகள் தரப்பினர் அல்ல என்றும், மேற்படி அடமான கடன் ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை கட்டுப்படுத்தாது என்றும் மேற்படி அடமான கடன் ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு 4.5.2018ம் தேதியில் ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணத்தில்

கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், மேற்படி கிரைய ஆவணத்தில் வாதிகள் தரப்பினர் அல்ல என்றும், மேற்படி கிரைய ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்குண்டான 3ல் 2 பங்கினை கட்டுப்படுத்தாது என்றும் மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய வாதிகள் பரிகாரம் கோர வேண்டிய அவசியமில்லை என்றும் கூறப்பட்டுள்ள சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும்.

உண்மையில் தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் 1ம் பிரதிவாதி கடந்த 1993ம் ஆண்டிலிருந்து 2013ம்ஆண்டு வரை ரமேஷ் சர்வீஸ் சென்டர் என்ற பெயரில் இருசக்கர வாகனத்தை பழுது பார்க்கும் தொழில் செய்து வந்தார். அதன் பின்னிட்டு மேற்படி கிராமத்திலேயே கடந்த 2013ம் ஆண்டிலிருந்து தற்போது வரை வர்மா ஆயில் ஸ்டோர் ரூ ஸ்பேர்ஸ் வைத்து தொழில் செய்து வருகிறார். மேற்படி தொழில் செய்து வந்த வருமானத்திலிருந்து தாவா சொத்துக்களை கடந்த 13.5.2013 தேதியில் 1ம் பிரதிவாதி அவருடைய பெயருக்கு கிரையம் பெற்றுள்ளார். அவ்வகையில் தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்திலிருந்து கிரையம் பெறப்பட்ட 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்தில் 1ம் பிரதிவாதியை தவிர வாதிகளுக்கோ மற்ற நபர்களுக்கோ எவ்வித உரிமையோ, பாத்தியமோ, அனுபவமோ இல்லை. அவ்வகையில் வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையோ, பங்கு பாத்தியமோ இல்லை.

வாதிகளின் தாவா பிராதில் தாவா சொத்துக்களை பூர்வீக சொத்துக்களின் வருமானத்திலிருந்து இப்பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெறப்பட்டதாக கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. இப்பிரதிவாதிக்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை. அதிலிருந்து வருமானமும் இல்லை. இப்பிரதிவாதிக்கு தனிப்பட பாத்தியப்பட்ட சொத்துக்களை அவருடைய சொந்த தேவைக்காக 2,3 பிரதிவாதிகளிடம் அடமான கடன் பெற்று அதற்கு

ஆதரவாக 4.5.2018 தேதியில் அடமான கடன் ஏற்படுத்தியபோது 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியை ஏமாற்றி மோசடி செய்து அடமான கடன் ஆவணம் என திரித்து கூறி தாவா சொத்துக்களை பொருத்து கிரைய ஆவணம் எழுதி பெற்றதை அறிந்த 1ம் பிரதிவாதி மேற்படி அடமான கடன் தொகையை 2,3 பிரதிவாதிகளிடம் இப்பிரதிவாதி திரும்ப செலுத்தி மேற்படி கிரைய பத்திரத்தை ரத்து செய்து கொடுக்கும்படி கோரியதற்கு 2,3 பிரதிவாதிகள் மேற்படி கிரையப்பத்திரத்தை ரத்து செய்துக்கொடுக்க முன்வராததால் இப்பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் மீது 4.5.2018 ம் தேதியில் 2,3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரைய ஆவணத்தை ரத்து செய்ய கோரியும், சுவாதீனம் வழங்க கோரியும் நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.112/2020 நெம்பில் தாவா தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு எவ்வித பங்கு பாத்தியமும் இல்லை. பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையில்லை. ஷை தாவா கடந்த 29.8.2024 தேதியில் தள்ளுபடியாகிவிட்டது. மேற்படி தீர்ப்பின் மீது இப்பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறார். அதனடிப்படையில் வாதிகளின் தாவா தள்ளுபடி ஆகத்தக்கது. தாவாவிற்காக கூறப்பட்டுள்ள வியாஜ்ஜியமூலம் உண்மையல்ல.

12) **<u>2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்–</u>**

வழக்குரை பாரா 3 முதல் 11ல் கூறியுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி கூட்டு சேர்ந்து கொண்டு அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். 1ம் பிரதிவாதி,

04.05.2018 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் வாயிலாக, சேவை இணைப்பை மாற்றியளிப்பதுடன் சேர்த்து, வழக்குச் சொத்தை 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து மாற்றியளித்துள்ளார். எனவே, இவ்விஷயம் வாதி தரப்பினருக்கு எதிராக ஒரு தடையுரிமையாக (Estoppel) அமைகிறது. விளம்புகை பரிகாரம் கோரப்படாத வரையில், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரத்தக்கதன்று.

நீதிமன்றக் கட்டண நோக்கத்திற்கான மதிப்பீடு சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. ஏனெனில், வைப்பீடு செலுத்தியதன் அடிப்படையில் அம்மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே, சேவை இணைப்புகள் 2-வது பிரதிவாதிக்கு மாற்றப்பட்டுவிட்டதால், இவ்வழக்கைத் தொடர்வதற்குரிய வழக்கு மூலம் ஏதுமில்லை. எனவே, கோரப்பட்டுள்ள பரிகாரம் பயனற்றதாகிவிடுகிறது. இப்பிரதிவாதி தேவைப்படின் கூடுதல் எதிர்வழக்குரையினை தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக்கொள்கிறார்.

13) <u>2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்-</u>

வாதிகளின் தாவா சுத்தப்பொய்யும், மோசடியுமானதாகும். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதிகளால் ஏற்கனவே அசல் தாவாவில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிலுரையை இந்த கூடுதல் பதிலுரையின் ஒரு பாகமாக சேர்த்து வாசித்துக்கொள்வது அவசியமாய் உள்ளது. உண்மையாதெனில் தாவா சொத்தின் பழைய சர்வே எண்.93/2பி என்றும், அதன் புதிய சர்வே எண்.93/2பி2 என்றும் கூறியுள்ள சங்கதிகள் சுத்தப்பொய். மேற்படி நிலையில் மேற்படி தாவா நிலைக்கத்தக்கதல்ல. மேலும் மேற்படி தாவாவில் ஏதோ இந்த அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி சேந்தமங்கலம் வட்டம், பவித்திரம்

கிராமத்தில் இருந்த சர்வே எண்.72/6F, 72/10C, 73/3A, 73/3B, 72/6A, 72/6B, 72/7, 72/6D, 72/6E, 72/3D ஆகிய பூர்வீக சொத்துக்களை 15.4.2005 தேதியில் விற்பனை செய்து அதில் வந்த வருமானத்தை வைத்து லேவாதேவி தொழில் செய்து அந்த வருமானத்தை கொண்டு 13.5.2015 தேதியில் தாவா சொத்தை கிரையம் பெற்றனர் என்று கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை. மேற்படி தாவா சொத்தானது இந்த 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜ்ஜித சொத்தாகும். மேற்படி தாவா சொத்தை 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து நாளதுவரை பாகப்பிரிவினை இன்றி வாதிகளும் அனுபவித்து வருகின்றனர் என்று கூறியுள்ளது பொய்.

உண்மையில் வாதிகள் அனுபவம் செய்து வந்திருந்தால் தாவா சொத்தின் விஸ்தீரணம் அதன் சர்வே எண்கள் தெளிவாக குறிப்பிட்டிருப்பார் தாவா சொத்தை மெர்க்கண்டைல் வங்கி பவித்திரம் கிளையில் கடந்த 21.8.2013 தேதியில் ரூ.25 லட்சத்திற்கு அடமானம் வைத்ததில் மேற்படி அடமான கடனை 1ம் பிரதிவாதியால் தீர்க்க முடியாத நிலையில் தாவா சொத்தை விற்பனை செய்து மேற்படி தொகையை கொண்டு மேற்படி கடனை அடைப்பதாக கூறி 1ம் பிரதிவாதி தாவா சொத்தை விலைக்கு விற்க முயற்சித்து வந்த நிலையில் இந்த வழக்கின் 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்தை விலைக்கு வைத்து கொள்வதாக 1ம் பிரதிவாதியிடம் விலைக்கு பேசி 2,3 பிரதிவாதிகள் மேற்படி 1ம் பிரதிவாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய அடமான கடனை செலுத்தி மேற்படி அடமான கடன் பத்திரத்தை ரத்து செய்து பின்னிட்டு மேற்படி தாவா சொத்தை 2,3 பிரதிவாதிகள் அரசு மதிப்பீட்டின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளனர்.

மேற்படி தாவா சொத்தானது இந்த 2,3 பிரதிவாதிகளால் சரியான பிரதிபிரயோஜனத்தின் அடிப்படையில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி தாவா சொத்தை விலைக்கு பேச 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு செல்வதற்கு முன்பிருந்தே

இன்று வரை இவ்வழக்கின் வாதிகள் 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய மனைவியுடனே வசித்து வருகிறார்கள். இந்த 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்னிட்டு தாவா சொத்தில் இருந்த வீட்டை பராமரிப்பு செய்து தற்சமயம் குடியிருந்து அனுபவம் செய்து வருகின்றனர். இந்நிலையில் தாவா சொத்தின் மதிப்பு அதிகரித்து விட்டதால் ஆத்திரம் அடைந்த 1ம் பிரதிவாதி வாதிகளை தூண்டிவிட்டு பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி அவரது மாமனாரான சச்சிதானந்தத்தை வைத்து வழக்கின் வாதிகளுக்கு கார்டியனாக நியமித்து பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தானது 2,3 பிரதிவாதிகளால் சரியான பிரதிபிரயோஜனத்தின் அடிப்படையில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களாகும். உண்மை இவ்வாறு இருக்க பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் தாவா சொத்தை இந்த 2,3 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற 4.5.2018 தேதியில் இருந்து தாவா சொத்தை சுவாதீனம் அடைந்து அனுபவம் செய்து வருவதுடன் தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புகள், குடிநீர் இணைப்பு மற்றும் வருவாய்துறை ஆவணங்களை மேற்படி கிரையப்பத்திரம் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையில் தங்கள் பெயருக்கு மாற்றி இன்றுவரை அதற்குண்டான வீட்டு வரி, குடிநீர் வரி, மின் உபயோகிப்பு கட்டணம் முதலியவைகளை செலுத்தி அனுபவம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது ஏதோ மேற்படி தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புகளின் பெயர்கள் மாற்றக்கூடாது என கூறி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த தாவா சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. ஏற்கனவே இந்த 2,3 பிரதிவாதிகள் பெயரில் மின் இணைப்பிற்குண்டான பெயர்கள் மாற்றப்பட்ட பின்பு தற்போது வாதிகளால் கோரப்பட்டுள்ள பரிகாரமானது infractuous என்ற தோசத்தால்

தள்ளுபடியாகத்தக்க ஒன்றாகும். மேற்படி தாவா சொத்தை இந்த 2,3 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற 4.5.2018 தேதியிலிருந்து இன்று வரை தங்களது சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி தாவா சொத்தில் இந்த 2,3 பிரதிவாதிகளை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையோ, அனுபவமோ கிடையாது. இந்நிலையில் மேற்படி மின் இணைப்பு குறித்து தாவா சொத்தில் உரிமையில்லாத இந்த வழக்கின் வாதிகள் பரிகாரம் கோர எவ்விதமான சட்ட முகாந்திரமும் கிடையாது. மேலும் மேற்படி வாதிகள் இன்று வரை 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவியின் பராமரிப்பிலேயே இருந்து வருகின்றனர். மேலும் மேற்படி தாவா சொத்து விவரம் தவறானது. அதனடிப்படையில் இந்த வாதிகள் எவ்வித பரிகாரமும் கோர முடியாது. மேலும் இந்த வழக்கின் வாதிகளின் கார்டியனான சச்சிதானந்தத்தை இந்த 2,3 பிரதிவாதிகளுக்கு யாரென்றே தெரியாது. மேற்படி நபரை இந்த 2,3 பிரதிவாதிகள் இதுவரை நேரில் சந்தித்ததே கிடையாது. இந்நிலையில் தாவாவில் கூறியுள்ள வியாஜ்ஜியமூலம் கற்பனையானது. தாவாவிற்கு எவ்வித வியாஜ்ஜியமூலமும் ஏற்படவில்லை. தாவா சொத்தை 2,3 பிரதிவாதிகள் விலைக்கு பெற்ற விசயம் வாதிகளுக்கு நேரடியாக நன்கு தெரியும். தற்போது பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2,3 பிரதிவாதிகள் தேவைப்படும் சமயத்தில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக்கொள்கிறார்கள். எனவே தாவாவை இப்பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

14) <u>2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாவது கூடுதல் பதிலுரை சுருக்கம்—</u>

வாதிகளின் தாவா சுத்தப்பொய்யும், மோசடியுமானதாகும், சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி பிரதிவாதிகளால் ஏற்கனவே இந்த அசல் தாவாவில் பதிலுரை மற்றும் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிலுரைகளை இரண்டாவதாக தாக்கல் செய்யும் இந்த கூடுதல் பதிலுரையின் ஒரு பாகமாக சேர்த்து வாசித்து கொள்வது அவசியமாய் உள்ளது. இந்த வழக்கின் வாதிகளும் அவரது தாயாரும் இந்த 1ம் பிரதிவாதி உடனே கூட்டாக வசித்து வந்து தற்பொழுது பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாவாவினை தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்தானது ஏதோ வாதிகளுக்கு பூர்வீக சொத்துக்கள் என பிராதில் கூறியுள்ளது சுத்தப்பொய். இந்த தாவா சொத்துக்களானது 1ம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்தக்களாகும். தாவா சொத்தை தவிர இந்த 1ம் பிரதிவாதி பெயரில் இன்னும் சில கிரைய ஆவணங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்படி கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை சேர்த்தாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா partital partition என்ற தோஷத்தால் தள்ளுபடியாகத்தக்க ஒன்றாகும். மேலும் இந்த வழக்கின் வாதிகள் பிராதில் கூறியுள்ளபோல் உண்மையில் தாவா சொத்து பூர்வீக சொத்த என கூறி வாதிகள் பாகப்பிரிவினை கோரியிருக்கும் நிலையில் இந்த 1ம் பிரதிவாதியின் தகப்பனாரும் வாதிகளின் பாட்டனாருமான சுப்பையா பெயரில் உள்ள சொத்துக்களையும் சேர்த்து பாகப்பிரிவினை கோரியிருப்பார். மேற்படி சொத்துக்களை இந்த தாவாவில் சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி தாவா partial partition என்ற தோஷத்தால் தள்ளுபடியாகத்தக்க ஒன்றாகும்.

தாவா சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு சுயராஜ்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி தாவா சொத்தினை இந்த பிரதிவாதிகள் சரியான பிரதிபிரயோஜனத்தின் அடிப்படையில் கிரையம் பெற்று இன்றுவரை தாவா

சொத்தினை அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி தாவா சொத்தில் கிரையம் பெற்ற பின்னிட்டு மேற்படி தாவா சொத்திற்குண்டான வருவாய்துறை ஆவணங்கள் மற்றும் மின் இணைப்புகளை இந்த பிரதிவாதி அவர்களது பெயருக்கு மாற்றி மேற்படி தாவா சொத்தில் உள்ள வீட்டிற்குண்டான வீட்டு வரி மற்றும் மின் கட்டணம் முதலியவைகளை இந்த பிரதிவாதிகள் அவர்களுடைய பெயரில் செலுத்தி அனுபவம் செய்து வருகின்றனர். மேலும் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி நாமக்கல் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் இந்த பிரதிவாதிகள் பெயரில் இந்த தாவா சொத்தை பொருத்து ஏற்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என கூறி அ.வ.எண்.112/2020 என்ற எண்ணில் தாவா தாக்கல் செய்திருந்தார். மேற்படி தாவாவானது இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இந்நிலையில் தாவா சொத்தை இப்பிரதிவாதிகள் எவ்வித இடைஞ்சலும் இன்றி அனுபவம் செய்து வருகின்றனர். இந்நிலையில் பொய்யான சங்கதிகள் கூறி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தாவா சொத்திடில் உள்ள குடிநீர் இணைப்புக்குண்டான குடிநீர் கட்டணம் முதலியவற்றை இந்த பிரதிவாதிகளே செலுத்தி வருகின்றனர். இந்த வாதிகள் இன்றுவரை 1ம் பிரதிவாதியுடனே வசித்துக்கொண்டு தற்பொழுது பொய்யான சங்கதிகளை கூறி தாவாவினை தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் மேற்படி தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பானது இந்த பிரதிவாதிகள் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்பு தற்பொழுது வேண்டுமென்றே இந்த வாதிகள் தாவாவினை தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில் மேற்படி தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல. எனவே வாதிகளின் தாவாவை 2ம்பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

15) **<u>7ம் பிரதிவாதி தனக்காகவும், 4,5,6 பிரதிவாதிகளுக்காகவும் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்–</u>**

வாதிகளின் தாவா சுத்தப்பொய்யும், மோசடியுமானது, சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. பிராது 3 முதல் 9 பாராக்களில் கூறியுள்ள சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும்.

உண்மையில் இப்பிரதிவாதி எல்லைக்குள் உள்ள வரகூர் மின் பகிர்மான மின் இணைப்பு எண்கள் 206–005–1532 (Tarrif V), 206–005–1533 (Tarrif V) 206–005–1652 (Tarrif IV), 206–005–1504(Tarrif VI) உடைய மின் இணைப்புகள் பொருத்து பெயர் மாற்றம் செய்யக்கூடாது என 1ம் பிரதிவாதி, இப்பிரதிவாதியிடம் கடந்த 14.6.2019 தேதியில் மனு கொடுத்துள்ளார். மேற்படி மனுவின் பேரில் இப்பிரதிவாதி மேற்படி மின் இணைப்புகள் உள்ள சொத்துக்களின் வருவாய் ஆவணங்களை ஆய்வு செய்தபோது 2,3 பிரதிவாதிகள் கடந்த 28.4.2018 தேதியில் மேற்படி மின் இணைப்புகள் உள்ள சொத்துக்களை சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றுள்ளார்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. மேலும் மின் இணைப்புகள் உள்ள கதவு எண்கள் பஞ்சாயத்து அலுவலகத்தால் பெறப்பட்டு பெயர் மாற்றம் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்கண்ட ஆவணங்கள் சரியாக இருப்பதால் மேற்கண்ட மின் இணைப்புகளை 1ம் பிரதிவாதி பெயரிலிருந்து 2ம் பிரதிவாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்படும் என இப்பிரதிவாதி தமது அலுவலக கடிதம் எண்.உபொ/இப/வரகூர்/கோ./தனி/ எண்.34/2019 நாள் 27.6.2019ன் மூலம் 1ம் பிரதிவாதியின் மனுவிற்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளார். இப்பிரதிவாதி தமது வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் மேற்படி மின் இணைப்புகளை பெயர் மாற்றம் செய்துள்ளார். மேலும் இப்பிரதிவாதி மேற்கண்ட மின் இணைப்புகளை நீதிமன்ற உத்திரவு இன்றி துண்டிப்பு செய்ய மாட்டார் எனவும் தெரிவித்துக்கொள்கிறார்.

இப்பிரதிவாதியை பொறுத்தவரை தாவாவிற்கு எவ்வித வியாஜ்ஜிய மூலமும் ஏற்படவில்லை. சொல்லியுள்ள வியாஜ்ஜியமூலம் வழக்கிற்காக கற்பனையாக கூறப்பட்ட சங்கதிகளாகும். இப்பிரதிவாதி பின்னிட்டு மேற்படி வழக்கில் சமூகம் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்திரவின்படி செயல்படவும் கட்டுபட்டவர் ஆவார். மேலும் இவ்வழக்கில் தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் பாத்தியத்தை இப்பிரதிவாதி தக்கவைத்துக்கொள்கிறார். எனவே வாதிகளின் தாவாவை இப்பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடி செய்து செலவுத் தொகை இப்பிரதிவாதிக்கு கொடுக்க உத்திரவிட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

**16) அ.வ,எண்.181/2021 வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை சங்கதிகளில் இருந்து இவ்வழக்கை தீர்வு காண 13.12.2021ம் தேதியில் வனையப்பட்ட எழுவினாக்கள்–**

1) முதல் பிரதிவாதி தாவா சொத்திலுள்ள மின் இணைப்பை பெயர் மாற்றுவதற்கு முயற்சி செய்து வருகிறார் என வாதிகள் கூறியிருப்பது சரியா?

2) வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

3) வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

17) இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.19 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

18) மேற்படி இரு வழக்குகளிலும் தரப்பினர்கள் ஒன்றாக உள்ளதாலும், தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகளும், பரிகாரங்களும் ஒன்றாக உள்ளதாலும் மேற்படி இருவழக்குகளையும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நாமக்கல் மாவட்ட நீதிமன்ற Transfer O.P.No.5/2020 மனுவில் 1.4.2021ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி இரு வழக்குகளும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அசல் வழக்கு எண்.241/2019 வழக்கில் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இனி இந்த தீர்ப்புரையில் தரப்பினர்கள் அந்தந்த வழக்கில் உள்ளவாரே குறிப்பிடப்படுவார்கள்.

19) **அ.வ.எண்.241/2019 வழக்கின் கூடுதல் எழுவினாக்கள் 1 முதல் 3 –**

தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டும், பவித்திரம் கிராமத்தில் இருந்த பூர்வீக சொத்துக்களை விற்ற தொகையை கொண்டும், வாதிகளின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி வட்டி தொழில் செய்து அதில் கிடைத்த வருமானத்தை கொண்டு தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதால் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக பாவிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் என வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துக்கள் என்றும், 1ம் பிரதிவாதியிடமிருந்து இந்த வழக்கின் 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை சரியான பிரதிபலனுக்கு கிரையம் பெற்றுள்ளதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துக்களா அல்லது பூர்வீக சொத்துக்களாக பாவிக்கப்பட வேண்டிய சொத்துக்களா என்பதை முதலில் தீர்மானிப்பது இந்த வழக்கிற்கு அவசியமானது என்பதால் கூடுதல் எழுவினாக்கள் 1 முதல் 3 முதலில் தீர்வு காண

எடுத்துக்கொள்ளப்படுகிறது.

20) வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, வாதிகளின் தந்தையாரான 1ம் பிரதிவாதிக்கு சேந்தமங்கலம் தாலுக்கா, பவித்திரம் கிராமத்தில் பூர்வீக சொத்துக்கள் இருந்தது. மேற்படி பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை கொண்டும், மேற்படி பூர்வீக சொத்துக்களை 15.4.2005ல் விற்பனை செய்த வகையில் கிடைத்த தொகையை கொண்டும் 1ம் பிரதிவாதி வட்டி தொழில் செய்து அதில் கிடைத்த வருமானத்தை கொண்டு 13.05.2015 அன்று தாவா சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். ஆகவே தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக பாவிக்கப்படவேண்டிய சொத்துக்கள் ஆகும். பூர்வீக சொத்துக்களை 1ம் பிரதிவாதியும், அவருடைய குடுப்பத்தினரும் விற்பனை செய்ததற்கான கிரைய ஆவணத்தின் கணிணி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணத்தின் கணிணி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியும் அவருடைய மனைவியும் மனம் போன போக்கில் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வந்தார்கள். அதனால் கடந்த ஐந்து ஆண்டுகளாக வாதிகள் அவர்களுடைய தாய்வழி தாத்தாவான சச்சிதானந்தம் என்பவரின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் வாழ்ந்து வருகின்றனர். வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா 1/3 பாகம் பாத்தியமானது. இந்நிலையில் 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதாக கூறி வந்த நிலையில் வாதிகளின் தாத்தா சந்தேகம் அடைந்து வாய்மொழியாக வில்லங்கம் பார்த்தபோது தாவா சொத்துக்களை 1ம் வாதி வங்கியில் அடமானம் வைத்திருந்ததும், பின்னர் அது பைசல் செய்யப்பட்டு 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளதும் தெரிய வந்தது. மேற்படி ஆவணங்கள் இந்த வாதிகளின் பாகத்தை பொறுத்து

செல்லத்தக்கதல்ல. ஆகவே வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்பதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென வாதிட்டார். வாதிகள் தரப்பு வாதத்திற்கு ஆதரவாக 2021 (2) SCC Page 718 மற்றும் 1999 SAR (Civil) Page 431 ல் உள்ள முன் தீர்ப்புகளை முன்னிலைப்படுத்தி வாதிட்டார்.

21) 2,3 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, வா.சா.ஆ.1 கிரையமானது 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய குடும்பத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்களை விற்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரையமானது ரூ.82,500/-க்கு 15.4.2005 ல் ஏற்பட்டுள்ளது. மேற்படி கிரைய தொகையானது கடன்களை பைசல் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதாக வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியிருக்க மேற்படி கிரையத்தொகையை கொண்டும், பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டும் 1ம் பிரதிவாதி வட்டி தொழில் செய்து கிடைத்த வருமானத்தை கொண்டு தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதாக கூறுவது உண்மையல்ல. மேலும் இந்த 1ம் வாதி/வா.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில், 1ம் பிரதிவாதி மெக்கானிக் தொழில் செய்து வருவதாக தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். அப்படியிருக்க 1ம் பிரதிவாதி வட்டி தொழில் செய்து வந்ததாக கூறுவது உண்மையல்ல என்பது வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி கடந்த 2013ம் ஆண்டில் வா.சா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் மூலம் ரூ.4,00,000/-த்திற்கு கிரையம் பெற்றுள்ளார். மேற்படி சொத்துக்களை வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் வங்கியில் அடமானம் வைத்துள்ளார். தாவா

சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துக்கள் என்பதால் 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் வங்கிக்கு அடமானம் ஏற்படுத்தி கடன் பெற்றுள்ளார். ஆகவே தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக பாவிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் என வாதிகள் தரப்பில் கூறுவது ஏற்கத்தக்கதல்ல. 1ம் பிரதிவாதிக்கு வருமானம் தரக்கூடிய பூர்வீக சொத்துக்கள் இருந்து அதன் மூலம் வருமானம் வந்தது என்பதையும், வா.சா.ஆ.1 கிரையத்தின் மூலம் 1ம் பிரதிவாதிக்கு கிரையத்தொகை கிடைக்கப்பெற்று அதனை கொண்டு வட்டி தொழில் செய்து வந்து கிடைத்த தொகையை கொண்டு வா.சா.ஆ.2 கிரையம் 1ம் பிரதிவாதியால் பெறப்பட்டது என்பது வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. ஆகவே தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக பாவிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் என வாதிகள் தரப்பில் கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்பதாலும், வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின்படி தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துக்கள் என்பதாலும், வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் யாதொரு பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்பதாலும், தாவா சொத்துக்களை 2,3 பிரதிவாதிகள் வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின் மூலம் சரியான பிரதிபலனுக்கு கிரையம் பெற்றுள்ளதாலும், வாதிகளுக்கு இந்த வழக்கில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

22) தாவா சொத்துக்கள் இந்த 1ம் பிரதிவாதியால் வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட் சொத்துக்கள் என்பதை பொறுத்து இருதரப்பிலும் யாதொரு சர்ச்சையும் இல்லை. ஆனால் வா.சா.ஆ.2 கிரையமானது 1ம் பிரதிவாதியால் பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டும், பூர்வீக சொத்தை விற்ற தொகையை கொண்டும் வட்டி தொழில் செய்து கிடைத்த தொகையை கொண்டு 1ம் பிரதிவாதி

பெயரில் வா.சா.ஆ.2 கிரையம் பெறப்பட்டது என்றும், அதனால் தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்களாக பாவிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் என வாதிகள் தரப்பு வழக்கு அமைந்துள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தை காண்கின்றபோது தாவா சொத்துக்கள் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆகவே தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் 1ம் பிரதிவாதியால் கிரையம்பெறப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிய வருவதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்படி கிரையமானது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு பெறப்பட்டதா அல்லது பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டும், பூர்வீக சொத்தை கிரையம்கொடுத்த வகையில் 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த கிரைய தொகையை கொண்டும், 1ம் பிரதிவாதி வட்டி தொழில் செய்து கிடைத்த தொகையை கொண்டு கிரையம் பெறப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்க வேண்டியுள்ளது. மேற்படி சங்கதியை நிரூபணம் செய்யும் பொருப்பு வாதி மீதே உள்ளது. 1ம் பிரதிவாதியின் தந்தையாரான சுப்பையா என்பரும், அவருடைய குமாரர்களான 1ம் பிரதிவாதி உட்பட மற்றவர்களும் சேர்ந்து ஒரு சரவணன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் கணிணி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை காண்கின்றபோது அதில், 1 நபரான சுப்பையா என்பவருக்கு பூர்வீகமாகவும், பாகமாகவும், பாத்தியப்பட்டது என்றும், 1ம் பிரதிவாதியின் மக்களுக்கு வாரிசு உரிமை படி பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்துக்களை கிரையம் கொடுப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கும், அவருடைய உடன் பிறந்தவர்களுக்கும் மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தையாருக்கும் பூர்வீக பாத்தியமான சொத்துக்கள் என்பது மேற்படி ஆவணத்தின் ஷரத்திலிருந்து தெரிய வருகிறது. மேலும் மேற்படி

ஆவணத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" 1,2,3,4,5,6 நபர்களின் வியாபார செலவிற்காகவும், பவித்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பெற்றிருந்த கடனை கட்டிய வகையில் பெற்றிருந்த கடனை கட்டிய வகையில் ஏற்பட்ட கடனை கட்டவும் மற்றும் எங்களுடைய அவசர அவசிய குடும்ப செலவிற்காகவும் அவசர அவசிய கைமாற்று கடன்களையும் வாய்மொழி கடன்களையும் தீர்ப்பதற்காகவும் ஏற்கனவே தங்களுக்கு நாங்கள் கிரையம் பேசியப்படி நாளது தேதியில் சுத்தக்கிரையம் செய்துக்கொடுத்தது ரூ.82,500.00 மூபலகு எண்பத்தி இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு எங்களுக்கு செல்லானதற்குரிய விவரமானது இதனடியில் கண்ட புஞ்சை தோட்ட நில வகையறாக்களை தங்களுக்கு நாங்கள் கிரையம் பேசிய காலத்தில் மேற்படி செலவுகளுக்காக கிரைய முன் அட்வான்சாக பல தவணைகளில் தங்களிடம் நாங்கள் ரொக்கமாக பெற்றுக்கொண்டுவிட்டது ரூ.50,000.00(ரூபாய் ஐம்பதாயிரம் ) இன்று இதனடியிற் கண்ட சாட்சிகள் முன்னிலையில் மேற்படி செலவுகளுக்காகவே தங்களிடம் நாங்கள் ரொக்கமாக பெற்றுக்கொண்டது ரூ.32,500.00 (ரூபாய் முப்பத்திரண்டாயிரத்து ஐநூறு) ஆக கிரைய தொகை ரூ.82,500.00 ம் (ரூபாய் எண்பத்திரண்டாயிரத்து நூறு) மேலே கண்ட விவரப்படி செல்லாகிவிட்டபடியால் …"

என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே வா.சா.ஆ.1 கிரையத்தின் மூலம் 1ம் பிரதிவாதியின் தந்தையாரும், 1ம் பிரதிவாதியும் அவருடைய சகோதரர்களும் பூர்வீக சொத்துக்களை கடந்த 15.04.2005ல் ரூ.82,500/-க்கு கிரையம் கொடுத்துள்ளனர் என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேற்படி கிரைய தொகையான ரூ.82,500/-ல் பவுத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பெற்றிருந்த கடனையும், கைமாற்று கடன்களையும் வாய்மொழி கடன்களையும் தீர்ப்பதற்காக ஏற்கனவே ரூ.50,000.00 பெறப்பட்டுள்ளதாகவும் மீதம் உள்ள ரூ.32,500.00-ஐ மேற்படி செலவுகளுக்காக

பெற்றுக்கொண்டதாகவும், 1ம் பிரதிவாதி, அவருடைய சகோதரர்கள் மற்றும் அவருடைய தந்தையாரின் வியாபார செலவுகளுக்காகவும் கிரையம் ஏற்படுத்தப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி சங்கதிகளை ஒன்றாக கருத்தில் கொண்டு பார்க்கின்றபோது வங்கி கடனையும், கைமாற்று கடனையும், வாய்மொழி கடனையும் பைசல் செய்வதற்காகவும் வியாபார செலவிற்காகவும் கிரையம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. அப்படியிருக்க மேற்படி கிரையத்தை ஏற்படுத்திக் கொடுத்த 6 நபர்களுக்கு கிரையத்தொகையில் தலா ரூ.13,750/- மட்டுமே கிடைக்கத்தக்கதாகும். அதில் வங்கி கடன், கைமாற்று கடன், வாய்மொழி கடன் போக ஒவ்வொருவருக்கும் எவ்வளவு தொகை மீதம் இருந்தது என்பது குறித்து வாதி தரப்பில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. இந்நிலையில் கிரையத்தொகையில் 1ம் பிரதிவாதியின் பாகமான ரூ.13,750/-ல் மேற்படி கடன்கள் போக வட்டி தொழில் செய்யும் அளவிற்கு 1ம் பிரதிவாதி வசம் கையிருப்பு இருந்தது என்பது வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் வாதிகள் தரப்பில் சொல்லப்படுவதுபோல் இந்த 1ம் பிரதிவாதி வட்டி தொழில் செய்து வந்தாரா என்பதையும் பரிசீலித்து பார்க்க வேண்டியுள்ளது. இந்த வழக்கின் 1ம் வாதியான வா.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

> " என் தந்தையார் இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் தொழில் செய்கிறார்."

என சாட்சியம் அளித்துள்ளார். 1ம் பிரதிவாதியின் சகோதரரான அன்பழகன் என்பவர் வாதிகள் தரப்பில் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> " 1ம் பிரதிவாதி சுயமாக சம்பாதித்த சொத்தில் தனக்கும் பங்கு இருப்பதாக கூறி வாதி இமயவர்மன் இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய அண்ணன் 1992 ம் ஆண்டிலிருந்து பைக் மெக்கானிக் ஷாப் வைத்து தொழில் செய்து வரும் நபர் என்றால் சரிதான். என்னுடைய அண்ணன் முசிறி ரோட்டில் உள்ள PVK காம்ளக்ஸ்-ல் உள்ள ஒரு கடையில் 1992 ம் ஆண்டிலிருந்து பைக் ஒர்க் ஷாப் வைத்து நடத்தி வருகிறார் என்றால் உண்மை தான். “

என சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே வாதிகள் தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள 1 ம் வாதியான வா.சா.1 வாதிகளின் சித்தப்பாவான வா.சா.2 ஆகியோர்களின் குறுக்கு விசாரணை சாட்சியத்திலிருந்து, 1 ம் பிரதிவாதி 1992 ம் ஆண்டிலிருந்து பைக் மெக்கானிக் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறார் என்பது தெளிவாக தெரிய வருவதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. பிராதில் சொல்லப்பட்டுள்ளது போல் 1 ம் பிரதிவாதி பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தையும், பூர்வீக சொத்துக்களை விற்ற வகையில் கிடைத்த கிரைய தொகையை கொண்டும், வட்டி தொழில் செய்து வரவில்லை என்பது வாதிகள் தரப்பு சாட்சிகளின் மேற்படி குறுக்கு விசாரணை சாட்சியத்திலிருந்து தெரிய வருவதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

23) ஆகவே பூர்வீக சொத்துக்களை விற்ற வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய தொகையில், அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் போக 1 ம் பிரதிவாதிக்குரிய கிரைய பாக தொகையானது மிகவும் சொற்ப தொகையாகவே இருந்திருக்க வாய்ப்புள்ளது. அதனை கொண்டு வட்டி தொழில் செய்திருக்க வாய்ப்பில்லை. அவ்வாறு 1 ம் பிரதிவாதி வட்டி தொழில் செய்யவில்லை என்பது வா.சா.1 மற்றும் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலம் தெளிவாகிறது. அப்படியிருக்க 2005 ம் ஆண்டில் ஏற்பட்ட வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலம் 1 ம்

பிரதிவாதிக்கு வட்டி தொழில் செய்யும் அளவிற்கு கிரைய பாக தொகை கிடைத்திருக்க வாய்ப்பில்லை என்பது தெளிவாக தெரிய வருவதாலும், 1 ம்பிரதிவாதி 1992 ம் ஆண்டு முதல் பைக் ஒர்க் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறார் என்பது வா.சா.1 மற்றும் வா.சா.2 ன் சாட்சியத்தின் மூலம் தெளிவாக தெரிய வருவதாலும், பைக் ஒர்க் ஷாப் தொழில் என்பது 1 ம் பிரதிவாதியின் உடல் உழைப்பையும், தனி திறனையும் கொண்டு செய்யக்கூடிய தொழில் என்பதாலும், வா.சா.ஆ.2 கிரையமானது 1 ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு கிரையம் பெறப்பட்ட சொத்து என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

24) 1 ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அதனால் 1 ம் பிரதிவாதிக்கு எதிராக எதிரிடை அனுமானம் எடுத்துக்கொள்ள வேண்டுமென வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டு கீழ்க்கண்ட முன் தீர்ப்புகள் முன்னிலைப்படுத்தி வாதிடப்பட்டது.

1) 1999 SAR (Civil) 431

Supreme Court

S.Saghir Ahmad & M.B.Shah, JJ.

Iswar Bhai C.Patel @ Bachu Bhai Patel ........Appellant

Versus

Harihar behera & Anr. ......... Respondents

Civil Appeal No.1417 of 1982; (From the judgment and order dated 8-11-78 of the Orissa High Court in F.A. No.147 of 1970); Decided on 16-3-1999.

E. Evidence Act, 1872 - Sec.114- Appellant had abstained from the witnessbox- No statement on oath in support of his pleading set out in the WS.- An adverse presumption has to be drown against him.

2) 2021(2) SCC Supreme Court cases 718

(BEFORE ROINTION FALI NARIMAN, NAVIN SINHA AND KRISHNA MURARI, JJ.) IQBAL BASITH AND OTHERS .......Appellants

Versus

N.SUBBALAKSHMI AND OTHERS .........Respondents

Civil Appeal No.1725 of 2010 decided on December 14, 2020

B. Evidence Act, 1872 - S.114 III.(g) and S.106 - Adverse presumption against defendant - Held, can be drawn if he does not present himself for cross-examination and refuses to enter witness box in order to refute allegations made against him or to support his pleading in his written statement.

25) 1ம் பிரதிவாதி இவ்வழக்கு விசாரணையின்போது தோன்றாத்தரப்பினராக இருந்துள்ளார். 1ம் பிரதிவாதி இந்த வழக்கின் 2,3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரையம் செல்லாது என அ.வ.எண்.112/2020 என்கிற வழக்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அந்த வழக்கானது 27.8.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆகவே 2,3 பிரதிவாதிகளுக்கு கொடுத்த வா.சா.ஆ.4 கிரையமானது செல்லாது என கூறி 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கையும், 1ம் பிரதிவாதியின் மக்களான இந்த வழக்கின் வாதிகள், வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் 2,3 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை கிரையம் கொடுத்த பின்னர் அதில் பாகம் கோரி இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்னர் என்பது தெரிய வருகிறது. அப்படியிருக்க வாதிகளும், அவர்களுடைய தந்தையாரான இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியும் 2,3 பிரதிவாதிகளின் கிரையத்தை முறியடிக்கும் வகையில் வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பிராதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை குறிப்பாக மறுத்துள்ளார். அப்படியிருக்க பிராதில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபணம்செய்யும் பொறுப்பு முதலில் வாதிகள் மீதே உள்ளது. அதனை நிரூபணம் செய்த பின்னரே 1ம் பிரதிவாதி அவருடைய வழக்கை நிரூபணம் செய்ய வேண்டும். அப்படியிருக்க தாவா

சொத்துக்கள் 1ம்பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்களை விற்ற தொகை மற்றும் வருமானத்தை கொண்டு வட்டி தொழில் செய்து சம்பாதித்த தொகையை கொண்டு 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டது என்கிற சங்கதி வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என மேற்கண்டவாறு இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால் மேற்படி முன் தீர்ப்புகள் இந்த வழக்கிற்க்கு பொருந்துவதாக இல்லை.

26) ஆகவே தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின் மூலம் 2,3 பிரதிவாதிகளுக்கு பாத்தியமானது என்பது மேற்படி ஆவணத்திலிருந்து தெரிய வருகிறது. மேலும் மேற்படி வா.சா.ஆ.4 கிரையத்தை ஆட்சேபித்து இந்த வழக்கின் 1ம்பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.112/2020 வழக்கானது கனம் நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தால் கடந்த 29.8.2024 அன்று தள்ளுபடியாகியுள்ளது என்பது பி.சா.ஆ.13 மற்றும் பி.சா.ஆ.14 ஆவணங்களில் இருந்து தெளிவாகிறது.

27) ஆகவே தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டும், பூர்வீக சொத்தை கிரையம் கொடுத்த வகையில் கிடைத்த தொகையை கொண்டும், வட்டி தொழில் செய்து கிடைத்த வருமானத்தை கொண்டு 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டது என்பது வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும்ஆவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துக்கள் என்றும், அதில் வாதிகளுக்கு 1ம் பிரதிவாதியின் மக்கள் என்கிற முறையில் பிறப்பினால் யாதொரு பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த எழுவினாக்களுக்கு வாதிகளுக்கு எதிராக விடை காணப்படுகிறது.

**28) அ.வ.எண்.241/2019 வழக்கின் எழுவினா 1–**

தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு யாதொரு பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என கூடுதல் எழுவினா 3 க்கு மேற்கண்டவாறு விடை காணப்பட்டுள்ளது. ஆகவே வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் யாதொரு பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்பதால், வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என பிறப்பிக்க கோரும் முதல்நிலை தீர்ப்பாணையும் கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு வாதிகளுக்கு எதிராக விடை காணப்படுகிறது.

**29) அ.வ.எண்.241/2019 வழக்கின் எழுவினா 2–**

வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள், பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் மேலே எழுவினாக்களுக்கு பரிசீலிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும், வாதிகளுக்கு இந்த வழக்கில் கோரியுள்ளவாறு பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**30) அ.வ.எண்.181/2021 வழக்கின் எழுவினாக்கள் 1 மற்றும் 2–**

வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்றும், அப்படியிருக்க வாதிகளின் பாகத்தை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வாதிகள் அ.வ.எண்.241/2019 வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும், வாதிகளின் பாகத்தையும் உட்படுத்தி 1ம் பிரதிவாதிஇந்த வழக்கின் 2,3 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.4 கிரையத்தை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி கிரைய ஆவணம் இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது, இந்த வாதிகளின் பாகத்தை பொறுத்து செல்லத்தக்கதல்ல. அப்படியிருக்க தாவா

சொத்துக்களில் உள்ள மின் இணைப்பை 2,3 பிரதிவாதிகள் பெயரில் மாற்றம் செய்ய முயற்சித்து வருகிறார்கள். அவ்வாறு மாற்றம் செய்தால் இந்த வாதிகளுக்கு மிகுந்த இழப்பு ஏற்படும். ஆகவே தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகளை அ.வ.எண்.241/2019 வழக்கில் இறுதி பாகப்பிரிவினை ஏற்படும் வரை 2,3 பிரதிவாதிகள் பெயரில் பெயர் மாற்றம் செய்யாமல் இருக்கவும், அ.வ.எண்.241/2019 வழக்கில் இறுதி பாகப்பிரிவினை ஏற்படும் வரை தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகளை துண்டிக்காமல் இருக்கவும், 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டுமென வாதிட்டார்.

31) 2,3 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகள் ஏற்கனவே 2,3 பிரதிவாதிகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்றும், ஆகவே இந்த வழக்கு பயனற்றதாகிவிட்டது என்றும் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு யாதொரு பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்துக்களை 2, 3 பிரதிவாதிகள் உரிய பிரதிபலனுக்கு 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற நல்லெண்ண கிரையதாரர்கள் என்றும் ஆகவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

32) 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, தாவா சொத்துக்களை 2,3 பிரதிவாதிகள் வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய கோரி 2,3 பிரதிவாதிகள் கொடுத்த விண்ணப்பத்தை பரிசீலித்து விதிமுறைகளுக்கு உட்பட்டு மேற்படி மின் இணைப்புகள் 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்றும், நீதிமன்ற உத்திரவு இன்றி மின் இணைப்பு

துண்டிப்பு செய்ய மாட்டோம் என்றும் வாதிட்டார்.

33) தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகளை அ.வ.எண்.241/2019 வழக்கில் இறுதி பாகப்பிரிவினை ஏற்படும் வரை பெயர் மாற்றம் செய்யக்கூடாது என வாதிகள் இவ்வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளனர். அ.வ.எண்.241/2019 வழக்கில் வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் யாதொரு பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என மேற்கண்டவாறு இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. மேலும் தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகளானது 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டதாக 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.6 ஆவணத்தை காண்கின்றபோது, தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகள் தற்போது என்.செல்வராஜ் என்கிற பெயரில் உள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது. ஆகவே தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகள் 2ம் பிரதிவாதி பெயரில் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் தெளிவாக தெரிய வருவதால் தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகளை 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக்கூடாது என வாதிகள் இந்த வழக்கின் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பயனற்றதாகிவிட்டது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகளை துண்டிக்க கூடாது என வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளனர்.

34) தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு யாதொரு பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் மேற்கண்டவாறு

தீர்மானித்துள்ளதாலும், 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் 2,3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுக்கும்போது இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள மின் இணைப்புகளையும் உட்படுத்தி கிரையம் கொடுத்துள்ளதாலும், மேற்படி கிரைய ஆவணத்தின்படி மின் இணைப்புகளை பெயர் மாற்றம் செய்துக்கொள்ள 2,3 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதாலும், இவ்வழக்கில் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டால் 2,3 பிரதிவாதிகளின் உரிமை பாதிக்கப்படும் என்பதாலும், வாதிகளுக்கு இந்த வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானித்து இந்த எழுவினாக்களுக்கு வாதிகளுக்கு எதிராக விடை காணப்படுகிறது.

**35) அ.வ.எண்.181/2021 வழக்கின் எழுவினா 3–**

வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள், பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் மேலே எழுவினாக்களுக்கு பரிசீலிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும், வாதிகளுக்கு இந்த வழக்கில் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**36) அ.வ.எண்.241/2019**

முடிவாக, வாதிகளுக்கு இந்த வழக்கில் கோரியுள்ளவாறு பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**37) அ.வ.எண்.181/2021**

முடிவாக, வாதிகளுக்கு இந்த வழக்கில் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இப்பொதுவான தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 24 – ஆம் நாளான இன்று அவையறிய பகரப்படுகிறது.

sd/–S.Prabha Chandran

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்–**

வா.சா.1. திரு.இமயவர்மன்

வா.சா.2. திரு.அன்பழகன்

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்–**

பி.சா.1. திரு.அன்பரசு

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 15.04.2005 | 1ம் பிரதிவாதியும் அவருடைய குடும்பத்ினரும் சரவணன் என்பவருக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2. | 13.05.2013 | தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3. | 21.08.2013 | 1ம் பிரதிவாதி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பவித்திரம் கிளைக்கு ஏற்படுத்திய அடமான கடன் ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4. | 4.5.2018 | 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5. | – | வில்லங்க சான்றிதழ் கணிணி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.6. | – | தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகளை பொருத்து கணிணி மூலம் பெறப்பட்ட சான்று கணிணி நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**–

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1. | – | இமயவர்மன் பெயரில் உள்ள ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.2. | – | இமயவர்மன் பெயரில் உள்ள TN 88 8475 வாகனத்திற்கான பதிவு சான்று ஜெராக்ஸ் |
| பி.சா.ஆ.3. | 20.09.2010 | ரமேஷ்காந்த் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் கணிணி நகல் |
| பி.சா.ஆ.4. | 24.02.2020 | முதல் தகவல் அறிக்கை கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது |
| பி.சா.ஆ.5. | – | பட்டா ண்.1959 கணிணி பதிவிறக்க நகல் |
| பி.சா.ஆ.6. | – | "அ" பதிவவேடு சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.7. | – | "அ" பதிவவேடு சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.8. | – | வீட்டு வரி ரசீதுகள் (16 எண்ணிக்கைகள்) சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.9. | 20.04.2018 | 2ம் பிரதிவாதி ஏற்படுத்திக்கொடுத்த அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல்3ம் பிரதிவாதி ஏற்படுத்திக்கொடுத்த அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.10. | 20.04.2018 | 3ம் பிரதிவாதி ஏற்படுத்திக்கொடுத்த அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.11. | – | சி.எம்.பி.நெ.8424/2019 மனு சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.12. | – | தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புகளுக்கு பி.சா.1ன் தகப்பனார் செலுத்திய மின் கட்டண ரசீதுகள் (9 எண்ணிக்கை) நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.13. | 29.08.2024 | அ.வ.எண்.112/2020 வழக்கில் மாவட்ட நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.14. | 29.08.2024 | அ.வ.எண்.112/2020 வழக்கில் மாவட்ட நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.15. | – | தாவா சொத்தில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ரசீதுகள் (4 எண்ணிக்கைகள்) சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.16. | – | தாவா சொத்துக்கள் குறித்து 2,3 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டா நீதிமன்ற சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.17. | – | தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புகளுக்கு பி.சா.1ன் தகப்பனார் செலுத்திய மின் கட்டண ரசீதுகள் (4 எண்ணிக்கை) நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.18. | 08.10.2024 | தாவா சொத்தில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ரசீது அசல் |
| பி.சா.ஆ.19. | – | தாவா சொத்துக்கள் குறித்து செல்வராஜ் பெயரில் ஏற்பட்ட சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கை 4) மின்னஞ்சல் மூலம் எடுக்கப்பட்டது. |

sd/-S.Prabha Chandran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.